Regd.with the Registrar of Newspapers for India.No.TN TAM /2007/22101
Regd.TN/CC(S)Dn/326/10-12

இயேசு கிறிஸ்து
30 வருடங்கள் காத்திருந்தார்
பரிசுத்த ஆவியினால்
அவரது ஊழியம் நடத்தப்பட.

# ஒளி ஏக்காளம்




ஒரு போதகரின்
தனிப்பட்ட வாழ்க்கை
மிகவும் பரிசுத்தமாக
இருக்க வேண்டும்.

நெருங்கிய நண்பர்களிடமும்கூட
பேசும்போதும்,
பழகும்போதும்
கவனமாக
இருக்கவேண்டும்.

VOL . 3 ISSUE . 9 தனிப்பிரதி ரூ 20/= ஏப்ரல் 2010




நமக்கு
தரிசனம்
கண்டிப்பாக
இருக்கவேண்டும்.

Owned and Published by : S.Paulraj Kennedy from A-1,Deju Plaza,No.2,South Avenue,Srinagar Colony, Saidapet,Chennai-600 015.Ph:+91- 44 - 22353500
Printed by : Jolly Peter at Sharp Offset Printers,New No.96,Old No.223,Peters Road,Royapettah, Chennai-600 014.Ph:+91- 44 - 28480607
Editor: Nija Kennedy

# தேவன் நம்முடனே இருக்கிறார்

**— நிஜா கென்னடி**

நம்மில் அநேருக்கு கர்த்தர் நம்முடனே கூட இருக்கிறாரா, நாம் செய்யும் ஒவ்வொரு வேலைகளிலும், செய்யும் ஒவ்வொரு காரியங்களிலும் கர்த்தர் நம்மோடு இருக்கிறாரா? என்ற சந்தேகம் வந்து விடுகிறது. பிரியமானவர்களே! கர்த்தர் எப்பொழுதும் நம்முடனே கூட இருக்கிறார். சின்ன வேலையோ, பெரிய வேலையோ, எந்த வேலையை நாம் செய்தாலும், கர்த்தர் நம்முடனே கூட இருக்கிறார். ஒரு சகோதரன் கணக்கர் வேலை பார்த்துக் கொண்டிருந்தார். ஒருநாள் அவருக்கு மேலிருந்த அதிகாரி அவரிடம், அந்த அறையில் உள்ள புத்தகங்களையும், சாமான்களையும் ஒதுங்க வைத்து அந்த இடத்தை சுத்தம் செய்யுமாறு கூறினார். அந்த சகோதரனும், அது அவருடைய வேலை இல்லை என்றாலும், மறுக்காமல், அந்த வேலையைச் செய்து கொண்டிருந்தார். அந்த அறையில் ஒரு வேதவசனம் மாட்டப்பட்டிருந்ததைக் கண்டார். அந்த வேத வார்த்தையின் மூலமாக கர்த்தர் அவரோடுகூட பேசினார்.

***நீ செய்கிற காரியங்கள் எல்லாவற்றிலும் தேவன் உன்னுடனே இருக்கிறார்.***

**- ஆதியாகமம் 21:22**

சோர்ந்து போயிருந்த அந்த சகோதரனுக்கு அந்த வார்த்தை மிகவும் ஆறுதலை அளித்தது. கர்த்தர் அந்த சகோதரனோடு கூட இருந்து, அவர் செய்த வேலைகளை பார்த்துக் கொண்டிருந்தார். அவரை வேலை வாங்கிய அதிகாரியையும் கூட கர்த்தர் பார்த்துக் கொண்டுதான் இருந்தார். ஒரு சில மாதங்களுக்குள் இந்த சகோதரன் வேறு இடத்தில் மிகவும் உயர்ந்த பதவியில் அமர்த்தப்பட்டார். இந்த சகோதரனை அற்பமாக நினைத்து வேலை வாங்கிய அந்த அதிகாரியோ அந்த வேலையிலிருந்தே நீக்கப்பட்டார். ஆம், பிரியமானவர்களே! கர்த்தர் நீதியுள்ள நியாயாதிபதி. நியாயத்திற்கு ஜெயம் கிடைக்கப் பண்ணுகிறவர். நான் படித்த படிப்பிற்கேற்ற வேலையை நான் செய்யவில்லையே, மிகவும் குறைந்த வேலையை நான் செய்கிறேனே, நான் சிறிய தொழிலை, வியாபாரத்தை செய்கிறேன் என்று வருதப்படாதீர்கள். கர்த்தர் நீங்கள் செய்யும் எல்லா காரியத்திலும் உங்களுடனே கூட இருக்கிறார். கர்த்தர் உங்களோடு கூட இருந்து நீங்கள் செய்யும் வேலையில் உயர்வை கட்டளையிடுவார். நீங்கள் கையிட்டு செய்யும் தொழிலை, வியாபாரத்தை



வர்த்திக்கச் செய்வார். நீங்கள் தனியாக அந்த வேலையை, வியாபாரத்தை, தொழிலை, காரியங்களை செய்யவில்லை. நீங்கள் என்னென்ன காரியங்களை செய்கிறீர்களோ, அவற்றிலெல்லாம் கர்த்தர் கூடவே இருக்கிறார். ஆதலால் ஒருபோதும் கலங்காதீர்கள். நான் தனியாக எல்லா காரியங்களையும் செய்கிறேன் என்று சோர்ந்து போகாதீர்கள். கர்த்தர் நீங்கள் செய்யும் எல்லாக் காரியங்களிலும் உங்களுடனே கூட இருக்கிறார் என்பதை ஒருபோதும் மறந்து விடாதீர்கள். இந்த உலகத்தை சிருஷ்டித்த சர்வ வல்லமையுள்ள தேவன் நம்மோடு கூட இருப்பது எவ்வளவு பெரிய பாக்கியம்.

## ஆபிரகாம்

பெலிஸ்தியரின் ராஜாவாகிய அபிமேலேக்கும், அவனது சேனாதிபதியாகிய பிகோலும் ஆபிரகாமைப் பார்த்து, நீ செய்கிற காரியங்கள் எல்லாவற்றிலும் தேவன் உன்னுடனே இருக்கிறார் என்று கூறினார்கள். அபிமேலேக்கு, கர்த்தர் ஆபிரகாமோடுகூட இருப்பதையும், அவன் செய்யும் எல்லாவற்றிலும் கர்த்தர்கூட இருப்பதையும் தெளிவாகக் கண்டு கொண்டான். அவன் ஆபிரகாமிடம், நீ என்னோடும், என் பிள்ளைகளோடும் நியாயமாகவும், இரக்கமாகவும் நடந்து கொள்வேன் என்றும், நீ எனக்கும், நீ வாழ்கின்ற இந்த தேசத்திற்கும் தயவு செய்வேன் என்று தேவன் பேரில் ஆணையிட்டு கொடு என்று கேட்டுக் கொண்டான். ஆபிரகாம் தேவனை அதிகமாக நேசித்ததால், தேவனோடு நெருங்கிய உறவோடிருந்தான். அபிமேலேக்கு அதை அறிந்ததினால், ஆபிரகாமோடு நல்லுறவோடு இருக்க விரும்பினான். ஆபிரகாம் தன் உறவினர்களைவிட, தன் தேசத்தை விட தேவனை அதிகமாக நேசித்தான். கர்த்தர் அவனிடம், நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டு வெளியேறி, நான் உனக்குகாண்பிக்கும் தேசத்துக்கு போ என்று கூறினார். உடனே அவன் கீழ்ப்படிந்தான்.கர்த்தர் சொன்னபடியே தன் தேசத்தை விட்டு புறப்பட்டு போனான். தேவன் கொடுத்த வாக்குறுதியை விசுவாசித்தான். அதனால் கர்த்தர் அவனோடுகூட இருந்தார். நாமும் கர்த்தரோடு நெருங்கிய உறவு வைத்திருக்க வேண்டும். அதுபோல கர்த்தருடைய பிள்ளைகளிடமும் அன்பாக இருக்கவேண்டும். ஏனென்றால் கர்த்தர் தம்முடைய பிள்ளைகளோடு கூட இருக்கிறார். அவர்களுக்கு எதிராகவோ, மறைமுகமாகவோ, நேராகவோ, பேசினாலோ, செயல்பட்டாலோ, கர்த்தருக்கு எதிராக பேசுகிறோம்; செயல்படுகிறோம்; தேவகோபம் நம்மேல் வரும். கர்த்தரையும், அவருடைய பிள்ளைகளுக்கும் உள்ள உறவை அபிமேலேக்கும், அவனது சேனாதிபதியும் அறிந்து வைத்ததினால், ஆபிரகாமோடு உடன்படிக்கை பண்ணிக் கொண்டு நல்லுறவோடிருந்தனர்.

## யோசேப்பு

**கர்த்தர் யோசேப்போடே இருந்தார்; அவன் காரியசித்தியுள்ளவனாக இருந்தான்.**

**- ஆதியாகமம் 39:2**

யோசேப்பு எகிப்திற்கு அடிமையாக கொண்டு போகப்பட்டான். எகிப்து

தேசத்தின் ராஜாவாகிய பார்வோனின் படைத்தலைவனாகிய போத்திபார், யோசேப்பை விலைக்கு வாங்கினான். யோசேப்பு, போத்திபாரின் வீட்டில் இருந்தான். கர்த்தர் யோசேப்போடே இருப்பதையும், அவன் செய்கிற எல்லாவற்றிலும் கர்த்தரின் தயவால் வெற்றியடைவதையும் போத்திபார் கண்டு கொண்டான். அதனால் அவன் யோசேப்பின் மேல் தயவு வைத்தான். அவன் செய்யும் காரியங்களை கர்த்தர் வாய்க்கச் செய்ததால், யோசேப்பின்மேல் மனமகிழ்ச்சி கொண்டு, அவனை தன்னுடைய வேலைகளைச் செய்வதற்காகவும், தன் வீட்டுக்கு விசாரணைக்காரனுமாக்கி,தனக்கு உண்டான யாவற்றையும் யோசேப்பின் கையில் ஒப்புவித்தான். யோசேப்பை அவன் வீடு முழுவதற்கும் அதிகாரியாக்கியதும், கர்த்தர் அந்த வீட்டையும், போத்திபாருக்கு சொந்தமான எல்லாவற்றையும் ஆசீர்வதித்தார். யோசேப்புக்காக கர்த்தர் இதைச் செய்தார். யோசேப்பு கர்த்தரோடுகூட நெருங்கி வாழ்ந்ததே அவனது உயர்வுக்கு காரணம். கர்த்தரோடுகூட ஐக்கியமாய் இருந்ததால், போத்திபாரின் மனைவி யோசேப்பை பாவம் செய்ய அழைத்தபோது தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்வது எப்படி? என்று சொல்லி, அந்த பயங்கரமான பாவத்துக்கு விலக்கி தன்னை பரிசுத்தமாக பாதுகாத்துக் கொண்டான். அவன் செய்யாத தவற்றிற்காக சிறையில் அடைக்கப்பட்டபோதும், கர்த்தர் அவனோடே கூட இருந்தார். சிறைச்சாலைத் தலைவன், கர்த்தர் யோசேப்போடே இருந்ததை அறிந்து கொண்டு, அவன் மேல் தயவு வைத்து சிறைச்சாலையில் வைக்கப்பட்ட கைதிகளை கண்காணிப்பவனாக நியமித்தான்.

> ***கர்த்தர் அவனோடே இருந்தபடியினாலும், அவன் எதைச் செய்தானோ, அதைக் கர்த்தர் வாய்க்கப்பண்ணினபடியினாலும்,அவன் வசமாயிருந்த யாதொன்றையும் குறித்துச் சிறைச்சாலைத் தலைவன் விசாரிக்கவில்லை.***
>
> ***- ஆதியாகமம் 34:23***

யோசேப்பு இருந்த சிறையில், பார்வோரின் பானபாத்திரக்காரரின் தலைவனும், சுயம்பாகிகளின் தலைவனும் (ராஜாவுக்கு ஆகாரம் சமைத்து தருபவர்), அடைக்கப்பட்டிருந்தனர். ஒருநாள் இரண்டு பேரும் சொப்பனம் கண்டு கலக்கத்தோடிருந்தனர். யோசேப்பு அவர்களை விசாரித்தபோது, அவர்கள் கண்ட சொப்பனத்திற்கு அர்த்தம் சொல்ல யாருமில்லை என்று கூறினார்கள். அப்பொழுது யோசேப்பு, ''சொப்பனத்துக்கு அர்த்தம் சொல்லுவது தேவனுக்குரியதல்லவா?'' (ஆதியாகமம் 40:8) அவைகளை என்னிடத்தில் சொல்லுங்கள் என்று சொல்லி, சொப்பனத்தைக் கேட்டு, அதற்கான விளக்கத்தையும் சொன்னான். தேவன்தான் அவனுக்கு சொப்பனத்தை விளக்கக்கூடிய கிருபையை கொடுத்தார். பானபத்திரக்காரரின் தலைவனின் சொப்பனத்திற்கு, யோசேப்பு சொன்ன அர்த்தத்தின்படியே நடந்தது. மறுபடியும் பார்வோன் அதே வேலையை அவனுக்கு கொடுத்து அவனை உயர்த்தினான். சுயம்பாகிகளின் தலைவனை ராஜா மரத்தில் தூக்கிப்போடுவார் என்று யோசேப்பு கூறியபடி அவனுக்கும் நடந்தது. இரண்டு வருடங்கள் சென்றபின்பு பார்வோன் ஒரு சொப்பனத்தைக் கண்டான். அப்பொழுதும் யோசேப்பு சொப்பனத்தின்



அர்த்தத்தை சொல்லுவது நானல்ல தேவனே அதற்கான அர்த்தத்தை விளக்குவார் என்று சொல்லி தேவனை மகிமைப்படுத்தினான். பார்வோன் கண்ட சொப்பனத்திற்கான அர்த்தத்தை சொன்னது மட்டுமல்லாமல், பார்வோன் என்ன செய்ய வேண்டும் என்ற ஆலோசனையையும், திட்டங்களையும், தேவனுடைய கிருபையால் யோசேப்பு வெளிப்படுத்தினான். பார்வோன், தேவ ஆவியைப் பெற்ற இந்த மனுஷனைப் போல வேறொருவன் உண்டோ? என்று சொல்லி, யோசேப்பை எகிப்து தேசமனைத்திற்கும் அதிகாரியாக மாற்றினான். யோசேப்போடே கர்த்தர் கூட இருப்பதை பார்வோன் அறிந்து கொண்டான். கர்த்தருடைய கிருபை யோசேப்பின்மேல் இருந்தது.



யோசேப்பு தன் தகப்பன் வீட்டில் இருந்தபோதும், போத்திபார் வீட்டில் இருந்தபோதும், சிறைச்சாலையில் இருந்தபோதும், எகிப்திற்கு அதிபதியாக இருந்தபோதும், கர்த்தர் அவனுடனே கூட இருந்தார். நம்மோடும் கர்த்தர் கூடவே இருக்கிறார். வேதவாசிப்பின் மூலமாகவும், ஜெபத்தின் மூலமாகவும், உபவாசித்து ஜெபிப்பதின் மூலமாகவும் கர்த்தரைக் கிட்டி சேரலாம். அவரோடு கூட உள்ள உறவில் வளரலாம். யோசேப்பின் உயர்வுக்கு காரணம், அவன் கர்த்தரோடு கூட இருந்த நெருக்கமான உறவே. பிரியமானவர்களே, நம்மோடுகூட கர்த்தர் இருப்பதை மற்றவர்கள் அறிந்து கொள்ளும்படியாக நம்முடைய வாழ்க்கை இருக்கிறதா? நாம் கர்த்தரோடுகூட நெருங்கி வாழ்கிறோமா? நம்முடைய வேதவாசிப்பு, ஜெபம் எப்படியாக இருக்கிறது? நாம் கர்த்தரோடு கூட நெருங்கி வாழும்போது யோசேப்பை உயர்த்தி, அவனோடுகூட இருந்ததுபோல, நம்மையும் கர்த்தர் உயர்த்தி எப்பொழுதும் நம்மோடுகூட இருப்பார்.

## தானியேல்

நேபுகாத்நேச்சார், எருசலேமிருந்து சிலரை பாபிலோனுக்கு சிறைப்பிடித்துச் சென்றான். அவர்களில் ஒருவன் தானியேல். ராஜாவின் அரண்மனையிலே வேலை செய்ய சகல ஞானத்திலும், அறிவிலும் சிறந்தவர்களையும், கல்வியில் நிபுணர்களையும் கொண்டு வந்தார்கள். தானியேலும் கொண்டுவரப்பட்டான். நேபுகாத்நேச்சார் ஒரு சொப்பனத்தைக் கண்டு மிகவும் கலங்கிப்போய் இருந்தான். அவன் கண்ட சொப்பனத்தைச் சொல்ல சாஸ்திரிகளையும் ஜோசியரையும், சூனியக்காரரையும், கல்தேயரையும் (மறைபொருளை கண்டுபிடிப்பவர்கள்) அழைக்கச் சொன்னான். அவர்கள் வந்தபோது, ராஜா அவர்களிடம், தான் ஒரு

சொப்பனத்தைக் கண்டதாகவும், அதன் அர்த்தத்தை அறிய வாஞ்சையாயிருப்பதையும் கூறினான். அதற்கு அவர்கள் சொப்பனத்தை சொல்லும், நாங்கள் அதன் அர்த்தத்தை விவரிப்போம் என்றனர். அதற்கு ராஜா, நீங்கள் சொப்பனத்தையும், அதற்கான அர்த்தத்தையும் சொல்ல வேண்டும் என்று கட்டளையிட்டான். கல்தேயர் ராஜாவிடம், ராஜா கேட்கும் காரியத்தை சொல்லக்கூடிய மனுஷன் பூமியில் ஒருவனும் இல்லை. தெய்வங்களால் மட்டுமே, ராஜாவின் கனவுகளையும், அதன் அர்த்தங்களையும் கூற முடியும் (தானியேல் 2:11) என்றார்கள். ராஜா இதைக்கேட்டவுடன் மிகவும் கோபமடைந்து, பாபிலோனிலுள்ள எல்லா ஞானிகளையும் கொலை செய்யும்படி கட்டளையிட்டான். தானியேல் இதை கேள்விப்பட்டபோது, ராஜாவிடம் சென்று தான் அந்த சொப்பனத்தையும், அதன் அர்த்தத்தையும் சொல்ல முடியும் என்று சொன்னான். பின் அவன் தன் நண்பர்களோடுகூட தேவனை நோக்கி ஜெபித்தான். அன்று இரவு தேவன் சொப்பனத்தையும், அதன் அர்த்தத்தையும் தரிசனத்தின் மூலமாக தானியேலுக்கு வெளிப்படுத்தினார். தானியேல் தேவனை மகிமைப்படுத்தினான். பின் ராஜாவிடம் சென்று, மறைபொருட்களை பரலோகத்திலிருக்கிற தேவனே வெளிப்படுத்துகிறவர்; தன்னுடைய சுயஞானத்தினாலல்ல என்று சொல்லி, சொப்பனத்தையும், அதன் அர்த்தத்தையும் விளக்கினான். அப்பொழுது ராஜா முகங்குப்புற விழுந்து, தானியேலை வணங்கி அவனுக்கு காணிக்கை கொடுக்கவும், தூபங்காட்டவும் கட்டளையிட்டான்.

> ***ராஜா தானியேலே நோக்கி, நீ இந்த மறைபொருளை வெளிப்படுத்தினபடியால், மெய்யாய் உங்கள் தேவனே தேவர்களுக்குத் தேவனும், ராஜாக்களுக்கு ஆண்டவரும், மறைபொருள்களை வெளிப்படுத்துகிறவருமாயிருக்கிறார்.***
>
> ***- தானியேல் 2:47***

தானியேலுக்குள் விஷேஷித்த ஆவி இருந்ததை நேபுகாத்நேச்சார் அறிந்து கொண்டான். தானியேலின் தேவனே மெய்யான தேவன் என்பதையும், வல்லமையுள்ள தேவன் என்றும், ஜனங்கள் தங்கள் ஞானத்தினால் அறிந்து கொள்ள முடியாதவற்றை வெளிப்படுத்துகிறவர் என்று ராஜா தேவனை புகழ்ந்தான். மறைபொருளை தேவன்தான் தானியேலுக்கு அறிவித்தார் என்றுசொல்லி, தேவனது ஆற்றலை மனதாரக் கண்டுகொண்டு தேவனை மகிமைப்படுத்தினான். ராஜா தானியேலை பாபிலோன் மாகாணம் முழுவதற்கும், அதிபதியாகவும், பாபிலோனிலுள்ள சகல ஞானிகளின் மேலும் பிரதான அதிகாரியாகவும் நியமித்தான். கர்த்தர் தானியேலுக்கு மறைபொருள்களை வெளிப்படுத்தி, அவன்கூட கர்த்தர் இருப்பதை ஞானிகளுக்கும், ராஜாவுக்கும் காண்பித்தார். உலக ஞானத்தில் தேறின ஞானிகளெல்லோருக்கும் முன்பாக தானியேலை கர்த்தர் உயர்த்தினார். உலக ஞானிகள் சொப்பனத்தையும், அதன் அர்த்தத்தையும், தங்கள் சுய அறிவினாலோ, ஆலோசனைகளினாலோ, மந்திர தந்திரத்தினாலோ, சூனியங்களினாலோ, ஜோசியத்தினாலோ, நாள், நட்சத்திரம் பார்ப்பதினாலோ சொல்ல முடியவில்லை. அவர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் கடுமையாக உழைத்து, மந்திரத்தையும், தந்திரத்தையும் கற்றது வீணாய்



போயிற்று. மந்திர, தந்திரங்கள் கற்றது, அது அவர்களுக்கு உதவவில்லை. நாள், நட்சத்திரங்கள் பார்த்தது எல்லாம் அவர்களுக்கு வீணாய் போயிற்று. ராஜா ஞானிகளையெல்லாம் அழிக்க கட்டளை யிட்டபோது, அவர்களால் தங்களைக்கூட காப்பாற்றமுடியவில்லை. தானியேலினால் அவர்கள் காப்பாற்றப்பட்டார்கள். ராஜ்ஜியம் எங்குமுள்ள சகல சாஸ்திரிகள், ஜோசியர்களை விட ஞானத்திலும், புத்தியிலும், பத்து மடங்கு சிறந்தவனாக தானியேல் இருந்தான். கர்த்தர் அவனை சகலவித தரிசனங்களையும், சொப்பனங்களையும் அறியத்தக்க அறிவுள்ளவனாக்கினார்.



கர்த்தர் தானியலோடுகூட இருந்து அவனை உயர்த்தியதற்கு காரணம் அவன் கர்த்தரை நேசித்தான். தினமும் மூன்று வேளை முழங்கால் படியிட்டு தேவனை ஸ்தோத்தரித்து ஜெபிக்கிறவனாயிருந்தான். தன்னுடைய பரிசுத்தத்தை பாதுகாத்துக்கொள்ள தன் இருதயத்தில் தீர்மானம் பண்ணிகொண்டான். ராஜாவின் சொப்பனத்தையும் அதன்அர்த்தத்தையும் தேவன் அவனுக்கு வெளிப்படுத்தியவுடன் பரலோகத்தின் தேவனை ஸ்தோத்தரித்து, இப்படியாக துதித்து புகழ்கிறான்:

> ***ஞானமும், வல்லமையும் அவருக்கே உரியது அவர் காலங்களையும், சமயங்களையும், மாற்றுகிறவர்; ராஜாக்களை தள்ளி ராஜாக்களை ஏற்படுத்துகிறவர், ஞானிகளுக்கு ஞானத்தையும், அறிவாளிகளுக்கு அறிவையும் கொடுக்கிறவர். அவரே ஆழமும் மறைபொருளுமானதை வெளிப்படுத்துகிறவர்; இருளில் இருக்கிறதை அவர் அறிவார்; வெளிச்சம் அவரிடத்தில் தங்கும்.***
>
> ***- தானியேல் 2:20-22***

கர்த்தர் ஜெபத்திற்கு பதில் கொடுத்தவுடன் உடனடியாக தானியேல் ராஜாவிடம் செல்லவில்லை. முதலாவது தேவனை துதித்து, ஸ்தோத்தரித்து மகிமைப்படுத்துகிறான். நாமும் தானியேலைப் போல, ஜெபிக்கிறவர்களாக, தேவனைத் துதித்து ஸ்தோத்தரிப்பவர்களாக, அவரை மகிமைப்படுத்து கிறவர்களாக, பரிசுத்தமுள்ளவர்களாக, நீதிமான்களாக வாழும்போது, தானியேலுக்குள்ளிருந்த ஞானத்தையும், அறிவையும் மறைபொருளை வெளிப்படுத்தும் கிருபையையும் நமக்குத் தந்து நம்மோடுகூட இருந்து நம்மையும் உயர்த்த தேவன் வல்லவராயிருக்கிறார். நாம் விசுவாசத்தோடு தேவனிடம் கேட்டு பெற்றுக் கொள்வோம்.

தரியு ராஜாவாக இருந்த காலத்தில் தன் ராஜ்யம் முழுவதையும் ஆளுவதற்கு நூற்றிருபது தேசாதிபதிகளையும், இவர்களுக்கு மேலாக மூன்று பிரதானிகளையும்

ஏற்படுத்த திட்டமிட்டான். தானியேல் மூன்று பிரதானிகளில் ஒருவனாயிருந்தான். தானியேலோ பிரதானிகளுக்கும், தேசாதிபதிகளுக்கும் மேற்பட்டவனாக, சிறந்தவனாக விளங்கினதாலும், தானியேலுக்குள் விசேஷித்த ஆவி இருந்தமையாலும் அவனை ராஜ்யம் முழுவதற்கும் அதிகாரியாய் ஏற்படுத்த ராஜா நினைத்தான். மற்ற பிரதானிகளும், தேசாதிபதிகளும் இதை அறிந்தவுடன் தானியேல்மேல் பொறாமை கொண்டு, அவன்மேல் குற்றஞ்சுமத்த காரணங்களைத் தேடினர். ஆனால், அவர்கள் தானியேல்மேல் எந்த குறையையும் கண்டுபிடிக்க முடியவில்லை. அவன் உண்மையுள்ளவனாகவும், நம்பிக்கைக்குரியவனுமாயிருந்தபடியால், அவன்மேல் சுமத்த யாதொரு குற்றமும், குறையும் காணப்படவில்லை. அவர்கள் தானியேலை அவனுடைய தேவனைப் பற்றிய விஷயத்தில் மாத்திரமே குற்றப்படுத்த முடியும், வேறு எந்த விஷயத்திலும் அவனை அகப்படுத்த முடியாது என்று கண்டார்கள். அவர்கள் ராஜாவிடம் சென்று, எவனாவது இன்னும் முப்பது நாட்களுக்கு அரசனாகிய உம்மை தவிர வேறெந்த தேவனையோ, மனிதனையோ நோக்கி எந்த ஒரு காரியத்திற்கும் விண்ணப்பித்தால், அவன் சிங்கக் கெபியிலே போடப்படுவான் என்ற ஒரு சட்டத்தை இயற்றி அதில் கையெழுத்து போடுமாறு கேட்டனர். அவர்கள் சொன்னபடி, ராஜாவும், அதில் கையெழுத்துப் போட்டான். தானியேலோ, இச்சட்டத்தை கேள்விப்பட்டதும், தனது வீட்டிற்குப் போய், முழங்கால்படியிட்டு, தான் எப்பொழுதும் செய்வதுபோன்று ஜெபித்தான். அந்த தேசாதிபதிகள், தானியேல் தேவனை நோக்கி ஜெபிப்பதைக் கண்டு, ராஜாவிடம் போய் தானியேல் உமக்குரிய கனத்தை கொடுக்காமல், நீர் இயற்றி கையெழுத்திட்ட சட்டத்தை மீறினான் என்று குற்றஞ்சாட்டினர். ராஜாவோ, இதை அறிந்து, மிகவும் கலங்கி, தானியேலை காப்பாற்ற வேண்டும் என முடிவு செய்தான். ஆனால், அவர்களோ, ராஜா கையெழுத்திட்ட சட்டத்தை மாற்ற முடியாது என்று கூறினர். பின் தானியேலை சிங்கக் கெபியிலே போட்டனர். ராஜா தானியேலிடம், நீ இடைவிடாமல் ஆராதிக்கும் உன் தேவன் உன்னைத் தப்புவிப்பார் என்று கூறினான் (தானியேல் 6:16). மறுநாள் அதிகாலையிலே ராஜா சிங்கங்களின் கெபிக்கு ஓடிப்போய், ‘‘தானியேலே, ஜீவனுள்ள தேவனுடைய தாசனே, நீ இடைவிடாமல் ஆராதிக்கிற உன் தேவன் உன்னைச்


**Form IV**

| | | |
|---|---|---|
| Place of Publication | : | A-1, Deju Plaza<br>2, South Avenue,<br>Srinagar Colony<br>Saidapet, Chennai - 600 015 |
| Periodicity | : | Monthly |
| Printer's Name | : | Jolly Peter |
| Nationality | : | Indian |
| Address | : | New No. 96, Old No. 223<br>Peters Road, Royapettah<br>Chennai - 600 014 |
| Editor's Name | : | Nija Kennedy |
| Nationality | : | Indian |
| Address | : | A-1, Deju Plaza<br>2, South Avenue,<br>Srinagar Colony<br>Saidapet, Chennai - 600 015 |
| Owner's Name | : | S. Paulraj Kennedy |

I hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Date : 31.03.2010

Publisher
S.Paulraj Kennedy




சிங்கங்களிடமிருந்து காப்பாற்றினாரா என்று கேட்டான். அப்பொழுது தானியேல், தேவன் என்னைக் காக்க தம்முடைய தூதனை அனுப்பி, சிங்கங்களின் வாயைக் கட்டிப்போட்டார் என்றான். ராஜா தானியேலை சிங்கக்கெபியிலிருந்து வெளியே கொண்டுவரச் சொல்லி, தானியேல்மேல் குற்றஞ்சாட்டினவர்களை சிங்கக் கெபியில் போடும்படி கட்டளையிட்டான். தானியேல் தேவன்மேல் விசுவாசம் வைத்தபடியால், சிங்கங்கள் அவனை காயப்படுத்தவில்லை. சிங்கக் கெபியிலே கர்த்தர் தானியேலோடுகூட இருந்தார்.

தானியேலின் மேல் விசேஷித்த ஆவி இருந்ததை, தரியு ராஜா அறிந்து கொண்டான். நம்முடைய வாழ்க்கை எப்படியாக இருக்கிறது? கர்த்தர் நம்மோடு கூட இருப்பதை மற்றவர்கள் அறிந்து கொள்ளும்படியாக நாம் நடந்து கொள்ளுகிறோமா? மற்றவர்களுக்கு நம் தேவனைக் குறித்து தானியேலைப் போல சொல்லுகிறோமா? தானியேலைப் பாருங்கள். தரியு ராஜாவுக்கு தேவனைக் குறித்தும், அவருடைய வல்லமையைக் குறித்தும், தேவனால் கூடாதது ஒன்றுமில்லை என்றும் கூறியிருக்கிறான். அதனால்தான் ராஜா தானியேலைப் பார்த்து, நீ இடைவிடாமல் ஆராதிக்கும் தேவன் உன்னைத் தப்புவிப்பார், என்று விசுவாசத்துடன் கூறுகிறான். தானியேலின் தேவன் ஜீவனுள்ளவர் என்பதையும், தானியேல் தேவனை இடைவிடாமல் ஆராதிப்பதையும் அறிந்து வைத்திருந்தான். சிங்கக் கெபியில் தானியேலைப் போட்டபோது, சிங்கங்கள் அவனை காயப்படுத்தவில்லை. இதன்மூலம் கர்த்தர் தானியேலோடுகூட இருப்பதை நாம் அறிந்து கொள்ளலாம். அவன் உண்மையுள்ளவனாக இருந்து, எந்தத் தவறும் செய்யாதபோதும், அவன்மேல் குற்றஞ்சுமத்தி சிங்கக் கெபியில் போட வைத்தார்கள். தானியேலின் மேல் குற்றஞ்சுமத்தி சிங்கக்கெபியில் போடவைத்தவர்களை மட்டுமல்ல, அவர்களது குமாரர்களையும், மனைவிகளையும் சிங்கக் கெபியில் போட்டார்கள். நாம் எதை விதைத்தோமோ அதையே அறுப்போம். தீமை செய்கிறவர்களுக்கு மட்டுமல்ல, அவர்களது சந்ததிக்கும் துன்பங்கள் தொடரும். நீங்கள் எந்த தவறும் செய்யாதிருந்தும் வீணாய் உங்கள் மேல் குற்றஞ்சுமத்துகிறார்களா? கவலைப்படாதிருங்கள். தேவன் உங்களுக்கு நிச்சயமாக நியாயம் செய்து, அவர் உங்களோடு இருப்பதை மற்றவர்களுக்கு காண்பிப்பார். தரியு ராஜா, தானியேலின் வாழ்க்கையின் மூலம் தான் தேவனை அறிந்து கொண்டது மட்டுமல்லாமல், தேசமெங்குமுள்ள ஜனங்களுக்கும் தேவனைக் குறித்து இவ்வாறாக எழுதுகிறான்:

> ***அவர் ஜீவனுள்ள தேவன், அவர் என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறவர்; அவருடைய ராஜ்யம் அழியாதது; அவருடைய கர்த்தத்துவம் முடிவு பரியந்தம் நிற்கும். தானியேலை சிங்கங்களின் கைக்குத் தப்புவித்த அவரே தப்புவிக்கிறவரும், இரட்சிக்கிறவரும், வானத்திலும், பூமியிலும், அடையாளங் களையும் அற்புதங்களையும் செய்கிறவருமாயிருக்கிறார்.***

***- தானியேல் 6:26-27***

## யாக்கோபு

யாக்கோபு தன் தகப்பன் இருந்த இடமாகிய பெயர்செபாவை விட்டுப் புறப்பட்டு தன் மாமனாகிய லாபான் இருக்கும் இடமாகிய பதான் ஆராம்-க்கு செல்லும் வழியில் இரவு ஓரிடத்தில் தங்கினான். ஒரு கல்லை எடுத்து அதை தலைக்கு வைத்துக்கொண்டு படுத்தான். அங்கே அவன் ஒரு சொப்பனங் கண்டான். ஒரு ஏணி பூமியிலிருந்து வானத்தை தொடுமளவிற்கு வைக்கப்பட்டிருந்தது. தேவ தூதர்கள் அதில் ஏறி மேலும் கீழும் வந்து போய்க் கொண்டிருந்தார்கள். அதற்கு மேலாக கர்த்தர் நின்று, நான் உன் தகப்பனாகிய ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனுமாகிய கர்த்தர் என்றும், நீ படுத்திருக்கிற இந்த பூமியை உனக்கு தருவேன் என்றும், பூமியிலுள்ள தூளைப் போன்று உன் சந்ததி இருக்கும் என்றும், உன்னாலும், உன் சந்ததியினாலும், பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும் என்றும்,

> *நான் உன்னோடே இருந்து நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக்காத்து, இந்த தேசத்துக்கு உன்னை திரும்பிவரப் பண்ணுவேன்; நான் உனக்குச் சொன்னதை செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை என்றார்.*
>
> *- ஆதியாகமம் 28:15*

கர்த்தர் யாக்கோவை பார்த்து நீ போகுமிடமெல்லாம் நான் உன்னோடே கூட இருப்பேன் என்று அவரே வாக்குக் கொடுக்கிறார். ஆபிரகாம் ஒரு நண்பனைப் போல தேவனோடு கூட உறவாடினான். ஈசாக்கு தியானப் புருஷனாய் இருந்தான். யாக்கோபும் இவர்களைப் போல தேவனோடுகூட உறவாட தேவன் வாஞ்சையோடிருந்து, அவனோடுகூட பேசி, அவன்கூட இருந்து அவனை ஆசீர்வதிப்பேன் என்று வாக்குறுதிகளைக் கொடுக்கிறார். நம் ஒவ்வொருவரிடமும் அவர் உறவாட வாஞ்சையாய் இருக்கிறார். நாம் ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் அவரோடுகூட உறவாடவும், அவரோடு ஐக்கியமாய் இருக்கவும் தேவன் விரும்புகிறார். தேவனோடு கூட நெருங்கி வாழும்போது ஆபிரகாமுக்கும், ஈசாக்குக்கும், யாக்கோபுக்கும் உள்ள வாக்குத்தத்தங்கள் எல்லாம் நமக்கும், நம் சந்ததிகளுக்கும் வரும். விசுவாசத்தோடு ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக் கொள்வோம். யாக்கோபை தேடி வந்து, நான் உன்னோடுகூட இருப்பேன் என்றும், உன்னை கைவிடமாட்டேன் என்றும் வாக்கு கொடுத்தவர், அவருடைய பிள்ளைகளாகிய நமக்கும் அதே வாக்கைக் கொடுக்கிறார்.

யாரெல்லாம் வாஞ்சையோடு கர்த்தரை தேடுகிறார்களோ, அவர்களுக்கு அவரை வெளிப்படுத்தி, அவருடைய பிரசன்னத்தை தருவார். கர்த்தருடைய பிரசன்னத்தினால், நம் கூட இருப்பதனால் பலன் என்ன? ஒரு காரியத்தை எப்படி செய்ய வேண்டும் என்று போதித்து வழிநடத்துவார் (சங்கீதம் 32:8). ஆலோசனை தருவார். எதிர்காலத்தை முன்கூட்டியே சொல்வார். கர்த்தருடைய கிருபையில்லாமல் ஒரு காரியமும் வாய்க்காது.

கர்த்தருடைய பிரசன்னத்தை எப்படி பெற்றுக் கொள்வது? ஜெபத்தின்



மூலமாக வேததியானத்தின் மூலமாக, உபவாசித்து ஜெபிப்பதன் மூலமாகவும், தேவனை துதித்து, ஆராதிப்பதன் மூலமாகவும் அவருடைய பிரசன்னத்தை பெற்றுக் கொள்ளலாம். சிலர் கஷ்டம் வரும்போது உபவாசத்தோடு தேடுகிறார்கள். மானானது நீரோடைகளை வாஞ்சித்து கதறுவது போல, நாம் வாஞ்சையோடு அவரை தேடும்போது தென்படுவார். தேடுங்கள் கண்டடைவீர்கள் என்ற வார்த்தையின்படி, உண்மையான இருதயத்தோடு அவரை தேடும்போது காணலாம். பரிசுத்தமாய் இருந்தால் அவரை தரிசிக்க முடியும். சாமுவேலை தேடி வந்து அவனோடுகூட பேசினார். தாவீதை தேடி வந்து அபிஷேகித்தார். நாம் எந்த இடத்திலிருந்தாலும், நம்மை தேடிவந்து அபிஷேகிப்பார். சில சோதனைகளை அனுபவிப்பதே விசுவாசத்தை பெற்றுக் கொள்வதற் காகத்தான். விசுவாசத்தை தருவதற் காக அப்படிப்பட்ட பாதையில் நடத்துகிறார். நமக்கு அது தீமையாக தெரியலாம். யோபுவுக்கு நடந்ததெல்லாம், தேவனுக்கும், யோபுவுக்கும் உள்ள ஐக்கியத்தை சாத்தானுக்கு காண்பிக்கத்தான். நாம் தேவனுக்குச் சொந்தமானவர்கள். ஆகவே உலக மக்களில் இருப்பவனைக் காட்டிலும் நமக்குள்ளே இருப்பவர் (இயேசு) பெரியவர் (1 யோவான் 4:14). நம்முடனே கூட இருப்பவர் பெரியவர் என்று நாம் விசுவாசிக்க வேண்டும். உள்ளான மனுஷனுக்குள்ளிருந்து நம்மை பலப்படுத்துவார். நம் பலவீனத்திலே பெலன் அவர். சுகம் தருபவர். அற்புதம் செய்பவர், அதிசயம் செய்பவர். தாய், தகப்பனைக் காட்டிலும் மிகவும் அதிகமாய் நம்மை நேசிப்பவர் நம் பரம தகப்பன். அல்லேலூயா! ஆமென்!

❑ ❑ ❑

---

**உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?**

இந்தப் பத்திரிகை வேண்டுவோர் சந்தா அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.

| | |
|---|---|
| **உள்நாட்டு வருட சந்தா** | ரூ. 200/- |
| **வெளிநாட்டு வருட சந்தா** | ரூ. 2000/- |

**S.PAULRAJ KENNEDY** என்ற பெயருக்கு DD/M.O / Cheque மூலம் அனுப்பவும். உங்களது முழு முகவரியையும் எழுதுங்கள். **ICICI** வங்கி வாயிலாகவும் நீங்கள் அனுப்பலாம்.

**ICICI வங்கி கணக்கின் பெயர் : S.PAULRAJ KENNEDY**

**ICICI வங்கி கணக்கு எண் : 0350 0150 7744**

---

*உங்களது ஜெப தேவைக்கும், தேவ ஆலோசனைக்கும்*

**+91 - 99406 67881, +91 - 44 - 22353500**

**E-mail : nijakennedy@yahoo.com** இணைய தளம் : **www.kennedyministries.org**

### ஊழியப் பயிற்சி வகுப்புகள்

வேதத்தின் ஆழங்களைக் கற்றுக் கொள்ள விருப்பமுள்ளவர்களும், ஊழியம் செய்ய வாஞ்சை உள்ளவர்களும் இதில் கலந்து கொள்ளலாம்.

வாரந்தோறும் - திங்கள் கிழமைகளில் மாலை - 7 மணி முதல் 9 மணிவரை

இடம் : ஏ-1, டேஜு பிளாஸா, 2 தெற்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. [சைதாப்பேட்டை கோர்ட் அருகில்]




www.FGTV.com

1. விசுவாசம் என்பது தேவனால் உருவாக்கப்படும் ஆக்கப்பூர்வமான ஆற்றல் கொண்டது. அதனால், விசுவாசத்தைத் தொடர்ந்து நிச்சயமாக அற்புதம் நடக்கும்.

2. நாம் விசுவாசத்தோடு தேவனுடைய அற்புதத்திற்காகக் காத்திருக்கும்போது, தேவனுடைய விசுவாசம் நமக்குள் கடந்து வரும். தேவனால் அற்புதங்கள் நம் வாழ்க்கையில் நடப்பதைக் காணலாம்.

3. முதலாவது நாம் பாவத்திலிருந்து மனந்திரும்ப வேண்டும். இரண்டாவது, நமது வாழ்வை தேவனுக்குக் கொடுக்க வேண்டும். மூன்றாவது, நமக்கு பொறுமை அவசியம்.

4. இயேசு கிறிஸ்து 30 வருடங்கள் காத்திருந்தார், பரிசுத்த ஆவியினால் அவரது ஊழியம் நடத்தப்பட.

5. பரிசுத்த ஆவியானவர், கல்லான இருதயங்களையும் நொறுங்குண்டு போகப் பண்ணுவார்.

6. இன்று அநேக தேவனுடைய ஊழியக்காரர்களும், பரிசுத்த ஆவியை அறிவு, உணர்வுகள், சித்தம் இல்லாத ஒன்றாக நினைக்கிறார்கள். அது பெரிய தவறாகும். பரிசுத்த ஆவி என்பது ஏதோ ஒன்று அல்ல. பரிசுத்த ஆவி என்பது ஒருவர், அவர் பரிசுத்த ஆவியானவர். அவருக்கு அறிவு, உணர்வுகள், சித்தம் உண்டு.

7. என்னுடைய கடந்தகால ஊழியத்திலே, நான் ஒரு வெற்றிகரமான போதகராக இருக்க விரும்பினேன். என்னுடைய ஜனங்களின்மேல் எனக்குக் கரிசனை இல்லாமல் இருந்தது. ஆனால், இப்பொழுது என்னுடைய தவறை உணர்ந்து கொண்டேன், வெற்றிகரமான போதகராக இருப்பதைக் காட்டிலும், ஆத்துமாவின் இரட்சிப்பின் முக்கியத்துவத்தையும், அவர்களை தேவனண்டை நடத்துவதுமே முக்கியம்.

8. ஒரு போதகரின் தனிப்பட்ட வாழ்க்கை மிகவும் பரிசுத்தமாக இருக்க வேண்டும். நெருங்கிய நண்பர்களிடமும்கூட பேசும்போதும், பழகும் போதும் கவனமாக இருக்க வேண்டும்.

9. இரட்சிக்கப்படாத பெற்றோரிடமும், பிள்ளைகளிடமும், உறவினர்களிடமும், பழகும்போது, பேசும்போது, உலகத்தைப் பற்றிப் பேசுவோமானால், பரிசுத்த ஆவியானவரைவிட்டு விலகிச் செல்ல நேரிடும். கர்த்தர் நம்மை அவருடன் இருக்க அழைத்திருக்கிறார். அவருடைய சித்தத்தின்படி வாழவேண்டும். அதில் சந்தோஷத்தைக் காண வேண்டும்.

10. கர்த்தரோடு நெருங்கி, ஆழமான ஐக்கியம் கொள்ள வேண்டும். அப்படி இருந்தோமானால் ஆவிக்குரிய முதிர்ச்சியடைவோம்.

11. பலத்தின் மூலாதாரம் பரிசுத்த ஆவியானவரே, அவர் நமக்குள் இருக்கிறார். அவரது சிந்தனையே நம் சிந்தனையாக இருக்க வேண்டும்.

12. உங்களுக்குள் எப்போதும் எதிர்மறையான சிந்தனைகளே இருந்தால், நீங்கள் ஒரு தோல்விகரமான மனிதர். 'இதை செய்ய முடியும்' என்று நினைப்பவர்களேயே தேவனால் பயன்படுத்த முடியும். 'இதை செய்ய முடியாது' என்று நினைப்பவர்களைத் தேவனால் பயன்படுத்த முடியாது. இன்றைய நம்முடைய சிந்தனைகளே, நாளைய நமது செயல்பாடுகள், ஜெபத்தின் மூலமாகவும், தேவனுடைய வார்த்தை மூலமாகவும் நமது சிந்தனையிலே ஒரு எழுச்சியைக் கொண்டு வர வேண்டும்.

13. பெரிய விசுவாசம், பெரிய பலன்களைக் கொண்டு வரும்.

14. நமக்கு தரிசனம் கண்டிப்பாக இருக்க வேண்டும்.

15. ''என்னை பரிசுத்தப்படுத்தும்'' என்று ஜெபிப்பதற்குப் பதிலாக ''என்னை இயேசு கிறிஸ்து மூலமாகப் பரிசுத்தப்படுத்துவதற்காக நன்றி தேவனே'' என்று அறிக்கை செய்ய வேண்டும். ''இந்த சாபத்திலிருந்து என்னை விடுதலை செய்யும்'' என்று ஜெபிப்பதற்குப் பதிலாக ''இந்த சாபத்தை என்னை மேற்கொள்ள வைப்பதற்காக நன்றி தேவனே'' என்று அறிக்கை செய்யவேண்டும்.

16. ஒரு பிரசங்கியார் எப்படி பிரசங்கத்தைத் தயார் பண்ணுகிறான் என்பது, அவனது ஊழியத்தின் வெற்றி, தோல்வியை நிர்ணயிக்கும்.

17. பிரசங்கிக்கும்போது உதாரணங்கள் அவசியம். பிரசங்கம் என்பது ஒரு அறை என்றால், உதாரணம் என்பது ஜன்னல் போன்றது. நிறைய ஜன்னல்கள் கூடாது. ஜன்னலே இல்லாமல் இருக்கக் கூடாது. சரியான நேரத்தில் சரியான உதாரணத்தைச் சொல்லுவது ஜனங்களுக்குள் ஆர்வத்தை உண்டாக்கும். உதாரணம், தேவனுடைய வார்த்தையை ஜனங்கள் புரிந்து கொள்ள உதவியாக இருக்கும்.

18. நமது பிரசங்கம், ஜனங்களின் அன்றாட வாழ்க்கைக்கு ஒத்து இருக்கவேண்டும்.

19. பெரிய பிரசங்கங்கள், பெருத்த ஏமாற்றத்தை உண்டாக்கலாம்.

20. கர்த்தர்மேல் நமக்கு வாஞ்சை வேண்டும். அப்பொழுதுதான் அவரால் நம்மை எடுத்துப் பயன்படுத்த முடியும். அப்படி வாஞ்சை இருப்பவர்களே மற்றவர்களிடம் அந்த வாஞ்சையை எழுப்ப முடியும்.

❖ ❖ ❖

# உபவாசமும் ஜெபமும்



பால்ராஜ்
கென்னடி

8

**நா**ம் எதைப் பெறவேண்டுமானாலும், கர்த்தரிடமிருந்துதான் பெறவேண்டும். அதற்காகவே ஜெபிக்கிறோம். சில சமயங்களில் நமக்கு மிகவும் அவசியமாக ஜெபிக்க வேண்டிய சூழ்நிலைகள் வருகின்றன. அந்த சமயங்களில் நமக்கு இன்னும் அதிகமாக, வல்லமையாக ஜெபிக்கவேண்டும் என்று தோன்றுகிறது. அதற்காகவே, உபவாச ஜெபம் ஏறெடுக்கப்படுகிறது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, மனுஷ குமாரனாய் இந்த பூமியிலே இருந்தபோது, உபவாசித்து ஜெபித்தார்.

ஒருமுறை அவருடைய சீஷர்களினால், ஒருவனில் இருந்த பிசாசை துரத்த முடியாமல் போனது. அப்போது, அந்தப்பிசாசை இயேசு கிறிஸ்து துரத்துகிறார். பின்னர் சீஷர்களிடம் அவரால் எப்படி முடிந்தது என்பதற்கானக் காரணத்தையும் கூறுகிறார். அது என்னவென்றால், இந்தவகையானப் பிசாசு, உபவாசத்தினாலும், ஜெபத்தினாலும் துரத்தப்பட முடியும் என்பதே (மத்தேயு 17:21).

மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் (உபாகமம் 8:3, மத்தேயு 4:7) என்ற வார்த்தையின்படி இந்த ஆகாரத்தினால் மாத்திரமல்ல, உம்முடைய வார்த்தையினாலேயே வாழ்கிறோம் என்பதை உபவாசத்தினால் உறுதிப்படுத்துகிறோம். கர்த்தருடைய வார்த்தைக்கு நம்முடைய வாழ்க்கையில் முதலிடம் கொடுப்பதை வெளிப்படுத்துவதே உபவாசம்.

உபவாசம் இருப்பதன் பலனைப் பெறவேண்டுமானால், முதலாவது நாம் ஏழை, எளிய ஜனங்களுக்கு உதவி செய்து, அவர்களிடத்திலே, அன்பு செலுத்துபவர்களாக இருக்கவேண்டும்.

> ***அக்கிரமத்தின் கட்டுக்களை அவிழ்க்கிறதும், நுகத்தடியின் பிணையல்களை நெகிழ்க்கிறதும், நெருக்கப்பட்டிருக்கிறவர்களை விடுதலையாக்கிவிடுவதும், சகல நுகத்தடிகளையும் உடைத்துப் போடுகிறதும்,***
>
> ***பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்து கொடுக்கிறதும், துரத்துண்ட சிறுமையானவர்களை வீட்டிலே சேர்த்துக் கொள்ளுகிறதும், உன் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமலிருக்கிறதும் அல்லவோ எனக்கு உகந்த உபவாசம்.***
>
> ***அப்பொழுது விடியற்கால வெளுப்பைப் போல உன் வெளிச்சம் எழும்பி, உன் சுக வாழ்வு சீக்கிரத்தில் துளிர்த்து, உன் நீதி உனக்கு முன்னாலே செல்லும்; கர்த்தருடைய மகிமை உன்னைப் பின்னாலே காக்கும்.***
>
> *- ஏசாயா 58:6-8*

ஏசாயா தீர்க்கதரிசியிடம் கர்த்தர், அவருக்குப் பிடித்தமான உபவாசம் என்னவென்று எவ்வளவு தெளிவாகச் சொல்லியுள்ளார் பாருங்கள். இதுவே உபவாசம். இதையே மத்தேயு எழுதின சுவிசேஷத்திலும் நாம் பார்க்கலாம். மிகச் சிறியரில் ஒருவனுக்கு நீ எதைச் செய்தாயோ, அதை எனக்கே செய்தாய் என்று கர்த்தர் சொல்லுகிறார் (மத்தேயு 25:40).

> ***ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான்; அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார்.***
>
> *- நீதிமொழிகள் 19:17*

பாருங்கள் எனக்குப் பிரியமானவர்களே, ஏழைக்கு நாம் கொடுப்பது கர்த்தருக்கே கடன் கொடுப்பதாகும் என்று கர்த்தர் சொல்லுகிறார். இதன் அடிப்படை என்னவென்று தியானித்துப் பார்த்தோமானால், அன்பு என்பதுதான் பதில். திருப்பி கொடுக்க முடியாத ஏழை ஜனங்களுக்கு அன்பு செலுத்துவோமானால் கர்த்தரிடமிருந்து நாம் அன்பைப் பெற்றுக் கொள்வோம்.

நாம் உபவாசம் இருப்பது, மற்றவர்கள் பார்க்கவேண்டும் என்பதற்காக இருக்கக் கூடாது. நாம் உபவாசம் இருப்பது, கர்த்தருக்கு முன்பாக நம்மைத் தாழ்த்தவேயொழிய, மற்றவர்களுக்கு அதைக் காண்பிக்க அல்ல (மத்தேயு 6:16-18).

உபவாசிக்கும் நாளிலே, அநேகப் பாடல்களைப் பாடி கர்த்தரைத் துதியுங்கள், பாவங்களை அறிக்கை செய்து மன்னிப்பு கேளுங்கள்,இதுவரை கர்த்தர் செய்த நன்மைகள் எல்லாவற்றையும் சொல்லி நன்றி செலுத்துங்கள், அதன்பின்பு உங்களது தேவையைக் கர்த்தரிடத்தில் தெரியப்படுத்துங்கள். கர்த்தர், நிச்சயமாய் பதில் செய்வார்.

எஸ்தர் ராஜாத்தி, 3 நாள் உபவாசித்து ஜெபித்தாள். தாவீது, 7 நாட்கள் உபவாசித்தான். தானியேல், 21 நாட்கள் உபவாசித்தான். இயேசு கிறிஸ்துவும், மோசேயும் 40 நாட்கள் உபவாசித்தார்கள். இவற்றில் உள்ள எண்களை (இத்தனை நாட்கள்) பார்க்காதீர்கள். உங்களுக்கு எப்படி உபவாசம் இருக்க முடியுமோ அப்படி இருங்கள். ஒரு நாளில் ஒரு வேளை உணவு மாத்திரம் சாப்பிடும் உபவாசம் இருக்கலாம். தொடர்ந்து 2 அல்லது 3 நாட்கள் எதையுமே சாப்பிடாமல் உபவாசித்து 2-ம் நாள் அல்லது 3-ம் நாளின் இறுதியிலே சாப்பிட்டு உபவாசத்தை முடிக்கலாம். வேலை பார்ப்பவர்கள் ஒரு நாளின் ஒரு வேளை உணவை மாத்திரம் தவிர்த்து உபவாசம் இருக்கலாம். மற்றவர்களை, பிள்ளைகளை உபவாசம் இருக்கும்படி வற்புறுத்தாதீர்கள்.

எப்படிப்பட்ட உபவாசத்தில் இருக்கின்றீர்கள் என்பதல்ல முக்கியம். அந்த உபவாசத்தின் மூலமாக இன்னும் கர்த்தரோடு நெருங்கியிருக்கிறீர்களா என்பதுதான் முக்கியம்.

❖ ❖ ❖